# 1

# வைகறை சந்தோஷம்!

## (எபேசியர் 1–3)

*எல்லாமே இருளாயிருக்கும் இரவுவேளை பெரும்பாலும் தனிமை நிறைந்த நேரமாகும். ஒரு இரவு முழுவதும் தனியொருவராய் பயணம் பண்ணுபவரோ அல்லது வியாதிப் பட்ட தான் நேசிக்கும் ஒருவருக்கு அருகில் இரவு முழுவதும் இருக்கும்போது அந்த இருளின் மணித்துளிகள் எவ்வளவு மெதுவாக கடந்தது, அது எவ்வளவு நம்பிக்கையிழந்த நெடிய நேரமாக காட்சியளித்தது என்பதை நினைத்துப் பார்க்கிறார். விடியலில் வெளிச்சக் கீற்று தோன்றினவுடனே, இருளின் நம்பிக்கையற்றத் தன்மை குறைவுபடத் துவங்குகிறது. சூரிய ஒளியின் பிரகாசமிக்க கதிர்கள் எல்லைக் கோட்டில் நர்த்தனமாடி வரும்போது, இரவின் மங்கின காட்சி மறைந்து ஆறுதல் இடம் பெறுகிறது. வெளிச்சம் எல்லாவற்றையும் சிறப்புள்ளதாக்குகிறது. வைகறைப் பொழுதின் வெளிச்சம் எப்படி ஒருவரை ஆறுதலால் நிறைக்கிறது என்பது மிகவும் வியப்பளிக்கும் செயல். உண்மையிலேயே காலைப் பொழுது ஒரு களிகூரும் நேரம் (சங்கீதம் 65:8ஆ).*

*நம்பிக்கையற்றத் தன்மையிலிருந்து கிறிஸ்துவினிடத்தில் மனமாறும் ஒருவருக்கு நீதியின் வெளிச்சம் உதிப்பதாக திருமறை விளக்கமளிக்கிறது: பாவத்தின் இருள் இருக்குமிடத்தை சத்தியத்தின் ஒளி எடுத்துக் கொள்கிறது. தேவனுடைய பிரமாணத்தைக் கற்று, புரிந்து கொண்டு கீழ்ப்படியாதவனுக்கு "விடியற்காலத்து வெளிச்சம் இல்லை" (ஏசாயா 8:20). மனித வர்க்கத்துக்கு இருக்கிற மாபெரும் ஆசீர்வாதங்களே தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைக் கற்றுப் புரிந்துகொள்ளுவது தான். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் திருமறையைப் படிக்கும்போது, சத்தியத்தின் ஒளி அவர்களைப் பிரகாசமடையச் செய்கிறது, இருளாயிருந்த அவர்களுடையநம்பிக்கையற்றத் தன்மை இருக்கிற இடம் தெரியாமல் மறைந் தோடுகிறது.*

*தேவனுடைய சத்தியத்தை ''பிரகாசமடையும்'' ஆசீர்வாதத்தை புதிய கிறிஸ்தவன் புரிந்து கொண்டிருக்கிறான் (எபிரெயர் 6:4; 10:32). அவன் சுவிசேஷத்தின் கட்டளைகளை அறிந்து, புரிந்து, கீழ்ப்படிந்திருக்கிறான். ஒருவர் இதைச் செய்யும்போது இருளின் வாழ்விடம் சத்தியத்தின் ஒளியால் பிரகாசமடைகிறது. அவனது ஆத்துமா ஒளியால் சூழ்ந்திருப்பதால் அவன் சந்தோஷத்தையும் ஆறுதலையும் கண்டடைகிறான்.*

*உருவகமாய்ப் பேசப்படும் உதயமாகும் வைகறை ஒளி மனமாற்ற நிகழ்ச்சியில் என்ன நடக்கிறது என்பதை சித்தரிக்கிறது. வைகறை உதயம் படிப்படியாக இருளின் இடத்தைப் பிடிப்பதுபோல, மனமாற்ற நிகழ்வு தேவனுடைய சத்தியத்தின் ஒளியை படிப்படியாக ஒருவரை புரிந்துகொள்ளச் செய்கிறது. வைகறை உதயம் பயமிருக்கும் இடத்தை மாற்றியமைப்பது*

போல, தேவனுடைய சத்தியத்தின் ஒளி நீதியுள்ள நியாயாதிபதியின் முன்பு பாவியாக நிற்கும் ஒருவரின் பயத்தைப் போக்கி, அவரின் இடம் பிடிக்கிறது. தேவன் எல்லா ஆத்துமாக்களையும் நேசிக்கிறார் எனவே யாருமே தங்கள் ஆத்தமாவை இழந்துவிடக் கூடாது என்று விரும்புகிறார் (2 பேதுரு 3:9, 10; யோவான் 3:16-19). தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்பிய போதே இரட்சிப்பு கிடைக்கும்படி செய்தார். கிறிஸ்து தம்மைத்தாமே பலியாக்கியதால் அவரது இரத்தம் நமது பாவங்களைக் கழுவக் கூடியதாயிருக்கிறது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்து கொண்டு தேவனுடைய எதிர்பார்ப்பின்படியே ஒருவர் கீழ்ப்படிவதை காண்பது என்பது எவ்வளவு பரவசமான காட்சி! அது ஒரு பெரிய சந்தோஷமான நேரம் (நடபடிகள் 16:34). நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்தபோது, உங்களைச் சுற்றிலுமிருந்த கிறிஸ்தவர்கள் சந்தோஷத்தினால் திளைத்துக் கொண்டிருந்தார்கள்! “நீங்கள் இருளிலிருந்து வெளிச்சத்துக்குத் திரும்பினீர்கள்” (நடபடிகள் 26:18), மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இப்போது உங்கள் வாழ்வை நிரப்புகின்றன.

கிறிஸ்தவ ஜீவியத்தை நீங்கள் புதிதாய் துவங்கியிருப்பதால் நீங்கள் இரட்சிப்படைந்த வழியை திரும்பிப் பார்ப்பது நலம். உங்கள் ஆத்துமாவை இரட்சித்த நற்செய்தியை நினைத்துக் கொள்ளுங்கள். தேவனுடைய சத்தியமாகிய உண்மையான வெளிச்சத்தை நீங்கள் கண்டுபிடித்த பின்பு, பாவ இருளை உதறிப் போட்டுவிட்ட சந்தோஷத்தையும், புதிதாய்க் கண்டு அனுபவிக்கிற சுதந்திரத்தையும் நினைவில் கொண்டு வாருங்கள்.

எபேசியர் புத்தகத்தை நமது படிப்புக்கு அடிப்படையாய் பயன்படுத்துவோம். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் பாவத்தின் இருளிலிருந்து தேவனுடைய வெளிச்சத்தினிடத்தில் திரும்பியதை நினைவுகூர்ந்து உற்சாகப்படும்படி பவுல் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதினார். இந்த நிருபம் தெய்வீகத் திட்டத்தின்படி இருளின் அதிகாரத்திலிருந்து தேவனுடைய ஒளியாகிய சத்தியத்திற்குள்ளான சகோதரர்களுக்கு நினைப்பூட்டுதலாயிருக்கிறது. பவுலும் அவர்கள் “ஒளியின் பிள்ளைகளாய் நடந்து கொள்வது என்றால் என்ன என்பது குறித்து நடைமுறை உபதேசத்தைக் கொடுத்தார்” (எபேசியர் 5:8). எபேசியர் நிருபம் தேவனால் - ஏவப்பட்டதும் ஒரு புதிய கிறிஸ்தவனுக்குரிய வழிகாட்டியுமான ஒரு புத்தகம். “இப்பொழுது நான் ஒரு கிறிஸ்தவன், நான் என்ன செய்ய வேண்டும்?” என்ற கேள்விக்கு ஒரு சிறப்புமிகு ஊற்றாக இதன் உபதேசங்கள் உள்ளன.

இந்தப் பாடம் எபேசியர் புத்தகத்தின் முதல் மூன்று அதிகாரங்களின் ஆராய்ச்சி. இந்த அதிகாரங்களில், ஏவப்பட்ட எழுத்தாளர் எபேசியர்களை பாவத்தின் இருளிலிருந்து மீட்ட தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறார். இந்தத் திட்டம் - தமது சபையில் மட்டுமே காணப்படுகிற ரீதியில் தேவனால் வடிவமைக்கப்பட்ட - இரட்சிப்பின் மாபெரும் உபதேசக் கோட்பாடு. தேவனுடைய மீட்பின் திட்டத்தை நீங்கள் எப்படி புரிந்துகொண்டீர்கள் என்பதைப் பற்றி என்னோடு சிந்தியுங்கள்.

# இருளிலிருந்து வெளிச்சத்துக்கு: கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு (1:3-23)

*தேவன் எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களை தமது கிருபையால் இரட்சித்தார். இந்த எபேசியர்கள் இரட்சிப்பின் உடன்படிக்கைக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றனர் (3:4-6). பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தின் தொடக்கப் பாகம் கிறிஸ்தவர்களின் வாழ்வில் வருகிற ஆசீர்வாதங்களைப் பட்டியலிடுகிறது. (இந்த பாடத்தின் பின்னால் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைக் காண்க.) பவுலின் வழக்கமான வாழ்த்துரையுடன் உடனடியாக செய்தியை அறிவிக்கத் துவங்குகிறார், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபேசியர் 1:3). இந்த வார்த்தைகள் கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்புக்குப் பின்னதாக சுதந்தரித்துக் கொண்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை வலியுறுத்துகின்றன.*

*தாங்கள் இரட்சிக்கப்படவும் தேவனுடைய கிருபையைப் பெற ஏதுவாக எபேசியர்கள் என்ன செய்தார்கள்? 2:8-10ல், தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றுவதால் எபேசியர்கள் இரட்சிக்கப்பட்டனர் என பவுல் காட்டினார். அவர்கள் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப் பட்டார்கள். இந்த இரட்சிப்பு எப்படி நிகழ்ந்தது? அவர்களுடைய மனமாற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்தது என்ன? தேவன் இன்று உண்மையுள்ள இருதயங்களிலிருந்து எதிர்பார்க்கிற அதே படிகளைத்தான் அவர்களும் எடுத்தார்கள். எபேசியர்கள் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்தார்கள் என்பதை ஆய்வு செய்வோமானால், இரட்சிக்கப்பட மக்கள் இன்று என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்வோம்.*

*நடபடிகள் 18; 19 மற்றும் எபேசியர் நிருபம் அவர்கள் மனமாற்றம் பெற்ற விதம் பற்றி எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகளை விவரிக்கிறது. முதலாவதாக, அவர்கள் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுவதைக் கேட்டார்கள் (நடபடிகள் 18:18-21; 19:1-10; எபேசியர் 1:13). இரண்டாவதாக, சுவிசேஷத்தைக் கேட்டவர்களாக, அது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் என்று அவர்கள் விசுவாசித்தார்கள். இந்த நம்பிக்கை (விசுவாசம்) இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ளச் செய்தது (நடபடிகள் 19:17; எபேசியர் 1:13, 15). மூன்றாவதாக, கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனும் அவர்களுடைய விசுவாசத்தால், அவர்கள் மற்ற எல்லா மத நம்பிக்கைகளையும் விட்டு மனந்திரும்பினார்கள். உடனடியாக அவர்கள் தங்களுடைய தவறான நம்பிக்கைகளை கைவிட்டு தேவனுடைய பிரமாணத்துக்கு விரோதமாய் செயல்படுவதை நிறுத்திக் கொண்டார்கள் (நடபடிகள் 19:17-20). நான்காவதாக, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும் தங்களுடைய வாழ்க்கையின் ஆண்டவர் என்றும் கிறிஸ்துவின் கட்டளைகள்படி தரித்திருக்க விருப்பமுள்ளவர்களாயிருப்பதையும் அறிக்கையிட்டதன் மூலம் மனந்திரும்புதலை அவர்கள் விளங்கப் பண்ணினார்கள் (நடபடிகள் 19:17ஆ, 18). ஐந்தாவதாக, அவர்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கம் வகிக்க (தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக தங்கள் பாவங்கள் அகற்றப்பட்டு*

இரட்சிக்கப்பட்ட ஒரு ஆத்துமாவாக இருக்க), ஒருவர் தண்ணீரிலே முழுக்கப்பட அல்லது ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்று அறிந்து கொண்டனர். சிலர் ஏற்கனவே முழுக்கப் பட்டிருந்தனர், ஆகிலும் கிறிஸ்து கட்டளையிட்டிருந்த ஞானஸ்நானத்தை அவர்களில் சிலர் பெற்றிருக்கவில்லை; ஆதலால் அவர்கள் மீண்டும் ஒருமுறை முழுக்கப் பட்டார்கள் (நடபடிகள் 19:2-5). கிறிஸ்து கட்டளையிட்டிருந்த முழுக்கு பாவமன்னிப்பிற்காக இருக்கிறது (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38; 22:16). ஆறாவதாக, அவர்களின் முழுக்கு அவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக்கியது. "கிறிஸ்துவுக்குள்" எனும் சொல் (அல்லது அதற்கு சமமான வார்த்தை) எபேசியர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாக இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறது. அவருடைய சரீரம் என்பது அவருடைய சபை (கொலோசெயர் 1:18). கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மட்டுமே இரட்சிக்கப்பட்டவர்கள் ஏனெனில் அவருக்குள் இருப்பவர்கள் எபேசியர் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையுடையவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவுக்குள்ளாக தேவையான அனைத்தையும் எபேசியர்கள் செய்தவைகளையெல்லாம் இன்று ஒரு ஆணோ பெண்ணோ செய்யாதவரை அவர் கிறிஸ்துவுக்குள் இருக்க இயலாது.

எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கை என்ன ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது? கிறிஸ்துவுக்குள் இடம் பெற எபேசியர்கள் எவைகளைச் செய்தார்களோ அவைகளை இன்றும் செய்கிற கிறிஸ்தவர்கள் அதே போன்று ஆசீர்வாதங்களை கண்டடைகின்றனர். எபேசியர் 1:3-23ஐ வாசித்து கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தில் அங்கமாயிருக்கிறவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைக் காண்க. கிறிஸ்தவர்கள் கீழ் வரும் ஆசீர்வாதங்களை அனுபவிக்கின்றனர்.

- பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு மேலான உன்னதங்களிலுள்ள ஆசீர்வாதங்கள் (வசனம் 3)
- தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மாபெரும் மதிப்பும் பாத்திரமுமான ஆசீர்வாதம் (வசனம் 4)
- தேவனுக்கு சுவிகாரப் புத்திரராகுதல் (வசனங்கள் 5, 6)
- பாவத்திலிருந்து மீட்கப் படுகிற - முழுமையான பாவ மன்னிப்பின் ஆசீர்வாதம் (வசனம் 7)
- ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளுகிற ஞானமும் புத்தியுமாகிய ஆசீர்வாதம் (வசனங்கள் 8, 17, 18)
- மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளத் தக்கதாக தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாட்டை பெற்றிருக்கிற ஆசீர்வாதம் (வசனங்கள் 9, 10)
- பரலோகத்தின் ஐசுவரியங்களைச் சுதந்தரிக்கிற ஆசீர்வாதம் (வசனங்கள் 11, 12)
- பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுகிற ஆசீர்வாதம் (வசனம் 13)
- நித்திய மீட்புக்கென கொடுக்கப்பட்டுள்ள அச்சாரம் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் (வசனம் 14)
- சக சகோதரர்களுக்குள் இருக்கிற அன்பின் ஐக்கியமும் சம விசுவாசமும்

ஆகிய ஆசீர்வாதம் (வசனம் 15)

- சம்பந்தப் பட்ட சகோதரர்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட ஜெபமாகிய ஆசீர்வாதம் (வசனம் 16)
- பிதாவாகிய தேவனிடத்திலிருந்து வரும் ஆவிக்குரிய சத்துவத்தின் வல்லமை (வசனம் 19)
- கர்த்தருக்குள்ளான பிரயாசத்தின் ஆசீர்வாதம் (வசனங்கள் 20-23)

ஒருவர் தேவனுடைய சுவிசேஷ சத்தியத்தைக் கற்று, சத்தியத்தை விசுவாசித்து, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தனது விருப்பத்தை அவனோ அவளோ அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென்று முழுக்குதலைப் பெற்று, விசுவாசத்திற்கென தன்னை ஒப்புக்கொடுத்த வாழ்க்கையில் தரித்திருக்கும் போது அதன் விளைவாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வரும். இந்த செயல் இரட்சிப்பின் உடன்படிக்கைக்குரிய கிருபைக்கு ஒருவரை உள்ளாக்கிறது! சுவிசேஷத்தையும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தையும் புரிந்து கொண்டு அதன் நம்பிக்கையின் நினைவுகூருதலோடு அவைகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது ஒருவரது ஆத்துமாவை ஆசீர்வதிக்கிறது. ஒரு கிறிஸ்தவன் தேவனோடு இருக்கிற தன்னுடைய உடன்படிக்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட உறவுமுறையை நினைவில் கொண்டிருக்கும் போது, நம்பிக்கையின்மையின் இருளை சந்தோஷம் விரட்டியடிக்கிறது. தொடர்ந்து நன்றி செலுத்துதலே இதன் விளைவு!

## நம்பிக்கையிழந்ததிலிருந்து நம்பிக்கைக்கு: கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாகுதல் (2:1-22)

வேத வசனங்களில் எபேசியர் 2ம் அதிகாரம் மிகப் பெரிய சிறப்பு மிக்க ஒன்று! இந்த அதிகாரம் இரட்சிப்பின் நடைமுறையை விவரிக்கிறது. பாவ இருளில் இழந்துபோய் நம்பிக்கையிழந்து பரிதாபமான நிலையிலிருந்தவர்களைக் குறித்து விளக்கமளிக்கும் வகையில் இந்த அதிகாரம் தொடங்குகிறது. பிறகு நம்பிக்கையிழந்த நிலையிலிருந்த அவர்களுக்கு தப்பிக் கொள்ளும் போக்கு உண்டாக்கப்பட்டது எவ்வாறு என்பதைச் சொல்லுகிறது. கடைசி வசனங்களில் பாவ இருளிலிருந்து நீதியாகிய ஒளிக்குத் திரும்பினவர்கள் நடத்தும் அற்புதமான வாழ்வை விவரிக்கிறது. ஏவப்பட்ட வசனங்களின் இந்த பகுதி மனமாற்றத்தில் என்ன நிகழ்கிறது என்பதைக் குறித்த வியப்புமிகு சாராம்ஸத்தை வெளிப்படுத்துகிறது. இந்த சாராம்ஸக் கருத்துக்கள் எப்படி முன்வைக்கப் பட்டுள்ளது என்பதைப் பாருங்கள்.

<u>முதலாவதாக, பாவத்தினால் உண்டாகும் நம்பிக்கையிழந்த நிலைமையைப் பார்க்கிறோம்</u> (2:1-12). இந்தப் பகுதி அதன் வாசகர்களை நினைவுறுத்தி அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்து தேவனோடு ஐக்கியத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தாலும், அவர்கள் முன்பு எப்பொழுதுமே அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குள் முழுக்கப் படுவதற்கு முன், அவர்கள் ...

- அக்கிரமங்களால் மரித்தவர்களாயிருந்தார்கள் (வசனங்கள் 1, 5).

- சாத்தானின் பிடியில் சிக்கி கீழ்ப்படியாமையை கொண்டிருந்தார்கள் (வசனம் 2).
- மாம்ச இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்திருந்தார்கள் (வசனம் 3).
- தேவனைச் சேராதவர்களாயிருந்தபடியால், ஆக்கினையை அடைந்தார்கள் (வசனங்கள் 11, 12).

பாவ இருளின் பரிதாப வாழ்வு அதிர்ச்சி அளிக்கக் கூடியது. அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்வோர் பரிதபிக்கப் படத்தக்கவர்கள். இந்த பரிதபிக்கப் படத்தக்க நிலைமையை கிறிஸ்தவன் நினைத்து தேவன் தனக்கு இரட்சிப்பை அளித்திருப்பதால் நன்றியறிதல் உள்ளவனாயுமிருக்கிறான் (2:8, 9). இரட்சிப்பின் திட்டத்தைக் கேட்டு கீழ்ப்படிகிறவர்கள் புது சிருஷ்டிகளாகி ஆவிக்குரிய மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். பாவத்தில் நம்பிக்கை இழந்திருந்த கிறிஸ்தவன் இப்பொழுது மகத்துவம் நிறைந்த தேவனுடைய இரட்சிப்பைப் பாராட்டுகிறான். பாவ வாழ்வை விட்டு வர விரும்புவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க ஆசீர்வாதங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது.

*இரண்டாவதாக, ஒப்புரவாகுதலின் சந்தோஷத்தைப் பார்க்கிறோம்* (2:13-18). தேவனுடைய இரக்கத்தால் பாவத்தின் இருளால் சூழ்ந்த பரிதாப நிலை சரிப்படுத்தப்படுகிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்கள்" (வசனம் 13) தங்களை முற்றிலும் வித்தியாசப்பட்டச் சூழ்நிலையில் காணுகிறார்கள். எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட தேவன் தமது ஒரே பேறான குமாரனை பலியாக்கினார் (யோவான் 3:16). அந்தக் கிருபாதார பலியால் கடுமையான கசப்புணர்வும் பகைமையும் கொண்டிருந்த உலகத்தை கிறிஸ்து ஒப்புரவாக்கினார். பாவத்தினால் தேவனுக்கும் மனுஷருக்குமிடையே பகைமையுண்டாகி மனுஷன் தேவனோடு கொண்டிருந்த ஆசீர்வதிக்கப் பட்ட ஐக்கியத்தை சீரழித்திருந்தது. ஜனங்களுக்குள்ளே பாவத்தின் தூண்டுதலால் மேட்டிமையுண்டாகி பகைமையாயிற்று. கிறிஸ்து பூமிக்கு வந்து கசப்பான காழ்ப்புணர்வு கொண்டிருந்த உலகத்திற்கு "சமாதானத்தைப் பிரசங்கித்தார்" (வசனம் 17). சுவிசேஷ வரலாற்றைக் கேட்பவர்கள், ஒப்புரவாகுதல் சாத்தியமானது என்பதைக் கண்டறிகிறார்கள்; யுத்தம் இன்னும் தொடர வேண்டியதில்லை.

இந்த யுத்தத்தில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு காலத்தில், தேவனுக்குச் சத்துருவாக இருந்தோம். இந்த உண்மையை சிலர் மறுக்கிறார்கள், ஆனால் ஒரு நேரத்தில் இப்பொழுது கிறிஸ்தவனாக இருக்கிறவர் ஒவ்வொருவரும் சாத்தானின் முயற்சிக்குத் தன்னை உட்படுத்தி தேவனைத் தோற்கடிக்க உதவியாயிருந்தவர்கள் தான். அவனோ அவளோ கிறிஸ்தவனாக மாறினவுடனே, முன்பு சாத்தானுக்கு உதவியவர்கள் இப்பொழுது தேவனிடத்தில் மாற்றிக் கொண்டார்கள். தேவன் நம்முடைய பகைமையையும் எதிர்ப்பையும் எப்படி மன்னிக்கிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான விஷயம்! தேவனுடைய அன்பான மன்னிப்புக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்த கிறிஸ்துவால் கிறிஸ்தவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்.

*மூன்றாவதாக, தேவனுக்கென்று நாம் சுத்திகரிக்கப் பட்டதைப் பார்க்கிறோம்* (2:19-22). இரட்சிப்பு புதிதாக்கப்படுதலாலும் ஒப்புரவாக்கப்படுதலாலும், பாவத்தின் நம்பிக்கையிழந்த இடத்தை மட்டும் பிடிக்கவில்லை, கர்த்தருடைய

காரியத்திற்கென கிறிஸ்தவர்கள் தங்களை ஒப்புக் கொடுக்கவும் செய்தது. இந்தப் பதத்தின் பொருள் என்னவெனில், கிறிஸ்தவன் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டு, தேவனோடுகூட தனது நட்பை ஒப்புரவாக்கி, தேவனிடத்தில் ஒரு சிறப்பான நட்புறவைப் பெற்றுக் கொண்டுள்ளான். இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் சீரிய நெறியுள்ள ஒரு அங்கமாக மாறுகிறான். இந்த ஆலயத்தில் ஒரு அங்கமாகும் அவன், தேவனுடைய ஊழியத்திற்கென பரிசுத்தமாக்கப் பட்டவனும், இரட்சிக்கப்பட்ட மற்றெல்லாரோடும் இணைந்து செயல்புரிகிற கிறிஸ்தவனுமாயிருக்கிறான். இனியும் அவன் தேவனுடைய சத்துருவல்ல, இனியும் தேவனுக்கு விரோதமாக அவன் ஆதரளிப்பவனல்ல. இப்பொழுது அவன் மற்ற கிறிஸ்தவர்களோடு ஒத்துழைத்து கர்த்தருடைய காரியங்களை விருத்தி பண்ணக் கூடியவனாக இருக்கிறான். "மரித்தவனாய்க்" காணப்பட்டவனிடம் என்ன ஒரு ஆச்சரியப்படத்தக்க முரண்பட்ட மாறுதலை ஒப்பிட்டுப் பார்க்கிறோம் (2:1)!

## குழப்பத்திலிருந்து நம்பிக்கைக்கு: கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்படும் உறுதி (3:1-19)

ஆவிக்குரிய விஷயங்களில் புதிய கிறிஸ்தவனுக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளது. எபேசியர்களின் மனமாற்றத்தை பவுல் மீண்டும் எண்ணிப் பார்த்து, ஜனங்கள் இரட்சிக்கப் படுவதை தேவன் மிகவும் எளிமையானதாக்கியிருக்கிறார் என்று தனது வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறார். தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலும் மனுஷனுக்கும் மனுஷனுக்கும் இடையிலும் ஒப்புரவாக்க ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு நேரத்தில் இந்த ஒப்புரவாகுதல் நம்பிக்கைக்கு ஏதுவில்லாதிருந்தது. அந்தத் திட்டம் தெளிவற்றும் குழப்பம் மிகுந்ததுமாய்க் காணப்பட்டது (அது ஒரு "இரகசியமாகக் கருதப்பட்டது"; வசனம் 3). இந்த நம்பிக்கையளிக்கும் திட்டம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்பட்டது (ஏசாயா 28:10). கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின், இந்தத் திட்டத்தின் விளக்கம் தெளிவாக்கப்பட்டது. முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் முழுமையாக திட்டத்தின் செயல் முறையை விவரித்துக் காண்பித்தனர். தேவனுடைய திட்டத்தை திருமறையை வாசிக்கிற எவரும் புரிந்து கொள்ள ஏதுவாக எழுதி வைத்தார்கள்.

ஒரு புது கிறிஸ்தவனாக, நீங்கள் அசைக்க முடியாத நம்பிக்கையை பெற்றுக் கொள்ளலாம். தேவனுடைய சித்தத்துக்கு நீங்கள் கீழ்ப்படிந்துள்ளீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களின் கீழ்ப்படிதல் எபேசியர் 1ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை உங்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறது. நம்பிக்கையளிக்கும் இந்த உறுதி சாத்தானுடைய சோதனைக்கு எதிராய்க் காத்துக் கொள்ளவும் இரட்சிப்பின் நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் உங்களைத் தூண்டுகிறது. ஒரு கிறிஸ்தவன் என்ற வகையில் உங்களுக்கு இந்த உறுதி வைக்கப் பட்டுள்ளது:

- உங்கள் வாழ்வின் வழிகாட்டியான தேவனுடைய சித்தத்தை அறியும் அறிவு (வசனம் 4)

- தேவனுக்குக் கீழ்ப்படியத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ள மற்ற கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் (வசனம் 6)
- கிறிஸ்துவின் ''அளவற்ற ஐசுவரியத்தை'' பகிர்ந்து கொள்ளுதல் (வசனம் 8)
- கர்த்தருடைய சபையை பரப்புவதற்கான பொறுப்பு (வசனங்கள் 9, 10)
- ஆவிக்குரிய விஷயங்களில் ஜெபத்தின் வல்லமையால் பெலனைக் கண்டுபிடித்தல் (வசனங்கள் 14-19)

உலகில் வாழ்பவர்கள் அதிகமான காரியங்களில் உறுதியைக் கண்டு பிடிக்க இயலாது. அநேகர் வெறுப்புகளையும் சோர்வையும் அடைகிறார்கள். கிறிஸ்தவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், எனெனில் ஒரு முழுமையானதும் உறுதியானதுமான நம்பிக்கையையும் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் இரட்சிப்பு கொண்டு வருகிறது. நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்வை துவங்கியுள்ள நிலையில், தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து விழிப்படைய வேண்டும். இருளிலிருந்து வெளிச்சத்துக்குத் திரும்பினதால், உங்கள் ஆத்தும இரட்சிப்புக்கு ஆசீர்வதிக்கப்பட்ட உறுதிகளை நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள்! இந்த சமாதானம் என்பது அநேகர் விரும்பும் ஒரு ஈவை கிறிஸ்தவம் உங்களுக்கு ஆசீர்வாதமாக்கியுள்ளது என்று பொருள்.

## பெலவீனத்திலிருந்து வல்லமை: கிறிஸ்துவுக்குள் தொடரும் உதவி (3:20, 21)

இந்த வசனங்கள் புதிய கிறிஸ்தவன் தேவனுடைய வல்லமையிலே நம்பிக்கை வைக்கும்படி புத்தி சொல்லுகின்றன. நீங்கள் கிறிஸ்தவ நடையை துவங்குவதால், உங்களிடத்திலிருந்த பழைய சோதனைகள் மிகவும் வலிமை மிக்கதாயும் நீங்கள் மனந்திரும்ப எடுத்த சமீப முடிவைக் காட்டிலும் வலிமையுள்ளதாகக் காணப்படலாம். ஒரு புதிய கிறிஸ்தவன் ஜெபத்தில் காணும் தீர்வுக்கான வல்லமையை மறந்து விடக்கூடும். எபேசியர் 3ம் அதிகாரத்தின் கடைசி வசனங்கள் கேள்வியெழுப்ப முடியாத வாக்கியங்களைக் கொண்டுள்ளது: உங்களுக்கு இருக்கிற எந்த பிரச்சனையானாலும் அதைக் காட்டிலும் பெரியவர் தேவன்! தேவனை நீங்கள் முழுமையாய் நம்பி வாழ்வில் அவருடைய சித்தத்தை உங்கள் வாழ்வில் பின்பற்றுவீர்களானால், மாபெரும் ஆசீர்வாதங்களை கண்டுபிடிப்பீர்கள்.

புதிய கிறிஸ்தவன் தேவனுடைய மகிமையை சபையிலே தேடுகிறான்! நீங்கள் பலதரப்பட்ட வேலைகளில் (ஊழியங்களில்) உங்களை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பலாம், உள்ளூர் சபையின் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளலாம், கர்த்தருடைய சபையை கட்டியெழுப்புவதிலே உங்களை அர்ப்பணித்திருக்கலாம் (காண்க எபேசியர் 2:19-22).

தேவனுடைய கட்டளைகளை பின்பற்றிப் போவதில் போராடிக் கொண்டுள்ள அனைவருக்குமே ஒரு தொடர்ச்சியான உதவி வைக்கப் பட்டுள்ளது. சோர்ந்து போகாதீர்கள். தேவன் "நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற வல்லமை'' உள்ளவர் என்பதை மறந்து விடாதீர்கள் (வசனம் 20). எபேசியர் புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பய பக்திக்குரிய காரியங்களை

நிறைவேற்றுகிற மாபெரும் தேவன் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ தொடர்ந்து உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

## நிறைவுறும் சிந்தனைகள்

ஒரு சபையின் செய்திதாளில் ஒரு ராஜாவின் திராட்ஷைத் தோட்டத்திலிருந்து ஒரு கொத்து திராட்ஷைப் பழம் வேண்டும் என்று விரும்பின ஒரு பெண்ணைப் பற்றிய கதை கூறப்பட்டிருந்தது. இந்தப் பெண்ணிற்கு வியாதிப்பட்ட ஒரு குழந்தையிருந்தது, அந்தக் குழந்தை திராட்ஷைப் பழத்தை ருசிக்க ஆவலாயிருந்தது. அதின் தாய் ராஜா வீட்டு திராட்ஷைத் தோட்டக்காரனிடம் போய் ஒரு சிறிய குலைத் திராட்ஷைப் பழம் தரும்படிக் கேட்டாள், ஆனால் அவள் இரக்கம் கிடைக்காமல் அனுப்பப்பட்டாள். பிறகு கொஞ்சம் பணத்தைக் கொண்டு வந்து, அந்தத் தோட்டக்காரன் பணத்திற்கு கொஞ்சம் பழங்களை விற்கக் கூடும் என்று எண்ணிக் கேட்டாள், ஆனால் மீண்டும் அவள் கடின வார்த்தைகளால் திருப்பி அனுப்பப்பட்டாள். இராஜாவின் மகள் தோட்டக்காரனின் கடின வார்த்தைகளையும் தாயின் கெஞ்சல்களையும் கேட்டாள். இளவரசி தாயினிடம் சென்று என்ன வேண்டும் என்று கேட்டாள். அந்தத் தாயார் தன்னுடைய சூழ்நிலைகளை விளக்கிச் சொல்லி தனது வியாதிப் பட்ட குழந்தைக்கு கொஞ்சம் திராட்ஷைப் பழம் வேண்டும் என்று கேட்டாள். ராஜாவின் மகள் கவனமாகக் கேட்டுவிட்டு பிறகு சொன்னாள், “அன்புள்ள பெண்ணே, எனது தகப்பனார் திராட்ஷைப் பழங்களை விற்பார் என்று தவறாகப் புரிந்துகொண்டுள்ளாய். அவர் ஒரு வியாபாரியல்ல, ஆனால் இராஜா; அவர் விற்பவரல்ல, கொடுப்பவர்” என்றாள். பிறகு அந்த இளவரசி ஒரு பெரிய குலை திராட்ஷைப் பழத்தைப் பறித்து அந்தத் தாயாரிடத்தில் கொடுத்தாள். அந்தத் தாயார் வேறு எந்த வகையிலும் பெற்றுக் கொள்ள இயலாத, இலவச ஈவைப் பெற்றாள்.

பரலோகத்தின் தேவன் பாவத்தின் குழப்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்குரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். நாம் அறியாமை வெட்கம் எனும் இருளின் தவறான புரிந்து கொள்ளுதலை புறம்பே தள்ளிவிட்டு பிரகாசிப்பிக்கிற ஒளியின் சந்தோஷத்தையும் கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளுதலையும் கண்டு பிடிப்போம். பரலோகத்தின் மகா தேவன் நம்மை நேசித்து நம்மோடு ஐக்கியம் கொள்ள விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்வோருக்கு விவரிக்க முடியாத சந்தோஷம் அவர்களுடைய இருதயங்களை நிறைக்கிறது. இந்த ஆசீர்வாதம் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது மற்றும் இலவசமாகவும் கொடுக்கப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 22:17). என்ன ஒரு மகிமையின் ஆசீர்வாதம்! தேவைப்படுவதெல்லாம் வாசித்து (கவனித்து), கற்று, புரிந்து கீழ்ப்படியும் மனம் மட்டுமே.

வைகறை வெளிச்சம் இருளாய்க் காணும் பயத்தையும் நம்பிக்கையிழந்த சூழ்நிலையையும் விரட்டியடிக்கிறது என்பதால் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.